கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
திட்டக்குடி.

**OS.126/2011** **PW: 1** **13.08.2026**

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சுமதி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10−வது விதியின் ஏற்பாட்டின்படி செல்வி.N.ஷாலினி,B.Com.L.L.B.(Hons.) ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுமதி | வயது | 41 |
| க/ பெயர் | கோஸ்மீன் | தொழில் | |
| வட்டம் | திட்டக்குடி | கிராமம் | பட்டூர் |
| மாவட்டம் | கடலூர் | | |

**<u>குறுக்கு விசாரணை:</u>**

கோவிந்த படையாட்சியின் மனைவி பெயர் சின்னபொண்ணு. அவர்களுக்கு ரத்தினம், ராமசாமி, கண்ணன், ஆறுமுகம், நாகம்மாள், அஞ்சலை பிள்ளைகள. பெண் வாரிசுகளை தவிர ஆண் வாரிசுகளுக்கு மட்டும் பாகம் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ரத்தினத்தின் மனைவி பெயர் செல்லம்மாள். ரத்தினம், செல்லம்மாளின் பிள்ளைகள் தான் கருப்புசாமி என்கிற சிவராம கிருஷ்ணன். அவர்களின் மனைவி பெயர் பொற்கொடி. அவர்களுக்கு இரண்டு மகன்கள் ஹரிகிருஷ்ணன் மற்றும் அஜய்கிருஷ்ணன் ஆவார்கள். ரத்தினம், செல்லம்மாள், கருப்புசாமி என்கிற சிவராம கிருஷ்ணன் மற்றும் அஜய்கிருஷ்ணன் ஆகியோர் இறந்துவிட்டனர். ரத்தினத்திற்கு கருப்புசாமியை தவிர கொளஞ்சி மற்றும் செல்வி என்ற பெண் பிள்ளைகள் உள்ளனர், ஆனால் அந்த விவரத்தை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். ராமசாமியின் மனைவி பெயர் முத்துலெட்சுமி. அவர்களுக்கு ராஜேந்திரன், பாலகிருஷ்ணன், தட்சிணாமூர்த்தி, பாண்டியன், பட்டாசாலை என்று ஐந்து பிள்ளைகள். தட்சிணாமூர்த்தி, மற்றும் பட்டாசாலையை தவிர மற்றவர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். இதனையும் நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். கண்ணன், பாப்பா வாரிசு வழியாக தான் வாதிகள் உரிமைகோருகிறார்கள். கண்ணன், பாப்பா அவர்களுக்கு ராஜேந்திரன், ஜீவானந்தம், அருட்செல்வி, கோஸ்மீன், மணி கோஸ்மீன் ஆகியோரை வாரிசாக காட்டியுள்ளேன் என்றால் ராஜேந்திரன் மட்டும் வாரிசு இல்லை. நான் ராஜேந்திரனை தவறாக வாரிசாக காட்டியுள்ளேன் என்றால் இல்லை, தவறாக போட்டுவிட்டார்கள்.

நான் வழக்குரையை சுமார் 7 முறை திருத்தியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. திருத்தல் விவரத்தில் வாரிசுகளை திருத்தி A அட்டவணையில் காட்டவில்லை என்றால் சரியல்ல. இந்த தேதிவரை A அட்டவணையில் வாரிசு

விவரத்தை திருத்தி காட்டவில்லை என்றால் சரிதான். அவ்வாறு திருத்தங்கள் செய்யாமல் நான் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரை செல்லாது என்றால் சரியல்ல.

சாட்சிக்கு மயக்கம் வருவதால் குறுக்குவிசாரணை சிறிது நேரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கில் 4, 5, 7 பரிகாரம் இல்லாத தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 5வது பிரதிவாதி ராமசாமி இறந்துவிட்டார், அவருக்கு வாரிசுக்கு சேர்க்காமல் வழக்கிலிருந்து நீக்கிவிட்டேன் என்றால் சரிதான். 6வது பிரதிவாதி கலைச்செல்விக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் வாரிசு யார் என்பதை காண்பிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் ஆனால் 6 வது பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை. தனலட்சுமி இறந்துவிட்டார், அவரின் வாரிசுகள் தான் 1, 3, 8, 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 9வது பிரதிவாதியான ரவி இறந்துவிட்டார் என்றும், அவரின் வாரிசுகள் தான் 10 முதல் 12 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 8, 9 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான். 9வது பிரதிவாதிக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்காததால் 10 முதல் 12 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான்.

இறுதியாக திருத்தப்பட்ட வழக்குரையின் பத்தி 7L மற்றும் M ஆகியவற்றில் 2ம் பிரதிவாதி மற்றும் 9ம் பிரதிவாதி இறப்பு பொறுத்து வாரிசு சேர்கை குறித்தும் தகவல் அளித்திருந்தும், பரிகாரத்தில் அது பொறுத்து திருத்தங்கள் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். அதனால் இறந்த 2ம் பிரதிவாதிக்கு எதிராகவே நான் தொடர் பரிகாரம் கோர தடைபட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் ஒப்புதல் கேட்கும் சொத்து யாரிடம் உள்ளது என்று குறிப்பிட்டு கேட்கவில்லை என்றால் சரிதான். அதைபோல் யாரிடம் இருந்து சொத்தை தர வேண்டும் என்ற கேட்காததால் எனது பிராது செல்லாது என்றால் சரியல்ல. (பிராதை காட்டி சாட்சியிடம் பரிகாரத்தை படித்து பதிலை கூற வேண்டும் என்ற சொன்னதற்கு சாட்சி எனக்கு படிக்க இயலாது என்று சொல்லிவிட்டார்). தனலட்சுமியின் வாரிசான யாரிடம் சொத்து உள்ளது என்று நான் குறிப்பிட்டு எனது பிராதில் சொல்லவில்லை என்றால் தனலட்சுமியின் வாரிசிடம் சொத்து இல்லை, வாரிசுகளை காண்பிக்க மட்டுமே தனலட்சுமியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

வழக்கு தாக்கல் செய்யும்போது சொத்தின் அமைப்பு காட்ட வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் ஆறு அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் 4 அயிட்ட சொத்துக்கள் தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் அசல் பிராதில் 6 அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். (சாட்சியிடம் அசல் பிராதை காண்பித்து கேட்கும்போது கண்ணாடி இல்லாமலேயே பிராதின் வரைபடத்தை பார்த்து பதிலை கூறினார்).

மொத்த சொத்தான 16 செண்டிற்கு வடக்கில் பாதை உள்ளது மற்றும் செல்லப்பனின் வீடு உள்ளது. மேற்கில் கதிர்வேல், கண்ணன் நாயுடு, கருப்புசாமி, ராமசாமி மற்றும் ஆறுமுகம் சொத்து உள்ளது. தெற்கில் ராஜேந்திரன் சொத்து. கிழக்கில் பௌசி சொத்து. ஆனால் மொத்த சொத்திற்கான நான்கெல்லைகளை எனது பிராது B அட்டவணை சொத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன். அதில் அவர்கள் யார் யாரிடம் எவ்வளவு தொகை கொடுத்து சொத்தை வாங்கியுள்ளார்கள் என்ற விவரம் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்துவிட்டு பதில் உரையோ, திருத்தல் பிராதோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதைபோல் பிரதிவாதிகள் சொல்லியுள்ள ஆவணங்களை முன் படுத்தவும் நான் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது வழக்குரை வரைபடமும் நான் ஆவணமாக தாக்கல் செய்தும் குறியீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். 7 வது பிரதிவாதியான மணி கோஸ்மியான் ஏற்படுத்திய உடன்படிக்கை ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கோஸ்மீனிடம் பணம் கொடுத்து உடன்படிக்கை ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஜீவானந்தத்துடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதைபோல் மணி கோஸ்மீன், கோஸ்மீன் மற்றும் ஜீவானந்தம் சேர்ந்து 3 வது பிரதிவாதியான சொப்பனாவிடம் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனதுபிரமாண வாக்குமூலத்தில் எதிர் வழக்குரையில் உள்ள சங்கதிகளை மட்டும் மறுத்துள்ளேன் என்றால் சரிதான்.

3ம் பிரதிவாதி பெயரில் வீட்டுவரி, தண்ணீர் வரி உள்ளதா என்றால் உள்ளது. 3 வது பிரதிவாதி வழக்கு சொத்தை சுற்றி முள்வேலி அமைத்துள்ளார்கள் என்றால் அவர்கள் சொத்துக்கு தான் முள்வேலி வைத்தார்கள். நான் எனது பெயரில் வீட்டுவரியை தான செட்டில்மெண்ட்டை ஆதரவாக கொண்டு மாற்றினேன் என்றால் சரிதான், அதற்கு முன்பு யார் பெயரில் வீட்டுவரி இருந்தது என்றால் ஆறுமுகம் பெயரில் இருந்தது. அதனை விசாரணைக்கு பிறகு 3ம் பிரதிவாதி அவர் பெயருக்கு மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றால் உள்ளது. யார் பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றால் 3 வது பிரதிவாதி பெயரில் உள்ளது. அதில் என்ன வீடு உள்ளது என்றால் ஆஸ்பெஸ்தாஸ் ஷீட்போட்ட வீடு உள்ளது. அந்த வீடு C2, C3 சொத்தில் தனியாக உள்ளதா அல்லது இணைந்து உள்ளதா என்றால் சேர்ந்து உள்ளது. (கேள்வி புரியவில்லை என்றும், எனக்கு படிக்க தெரியாது, நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளளேன் என்று சாட்சி தானாக கூறினார்). 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன் ஆனால் வழக்கு நிலுவையில் இருப்பதால் தீர்ப்பின் அடிப்படையில் தான் மாற்ற முடியும் என்று சொல்லிவிட்டார்கள். வழக்கிற்கு

முன்பு ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள வீடு எந்த ஆண்டில் கட்டப்பட்டது என்றும், யார் கட்டினார் என்ற விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3ம் பிரதிவாதி வீடு கட்டிவிட்டார். வழக்கு பின்பு கட்டப்பட்ட வீட்டை வழக்கு தாக்கல் செய்யும்போது இடித்து தர வேண்டும் என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் (சாட்சி கேள்வியை புரிந்து கொள்ளாமல் சொன்ன பதிலையே மீண்டும் மீண்டும் சொல்லி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்து வருகிறார்). வழக்கு சொத்து விவரத்தில் வழக்கு சொத்தில் வீடு இருப்பதாகவோ, மின் இணைப்பு இருப்பதாகவோ, குடிநீர் இணைப்பு இருப்பதாகவோ குறிப்பிட்டு காட்டியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் அமைப்பு வழக்கு காலத்தில் எவ்வாறு உள்ளதென தெரிவிக்காமல் தாக்கல் செய்துள்ள வழக்குரை, வழக்கை தீர்மானிக்க தேவையான தகவல்களை வேண்டுமென்றே மறைத்து செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வழக்கின் தன்மையை பூஸ்தியில் உள்ளவாறு தெரிவித்தால் பாதிக்கும் என்பதால் வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் என மறுப்பதால் அவற்றை முன்னிலைப்படுத்தி தரப்பினர் கையெழுத்தோடு ஒப்பீடு செய்ய நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

N SHALINI
Digitally signed by N SHALINI
Date: 2026.08.13 17:35:38 +0530

Additional District Munsif,
Tittagudi.